# எனது ஊர்

குடிசை வீடு, ஓட்டு வீடு,
காண்கிரீட் தகர வீடு

வீடுகளின் வகைகள்

கோவில், பள்ளி,
கடை, தபால்
நிலையம், வங்கி
மருத்துவமனை

எனது ஊரில்
வசிப்பவர்கள்

மனிதர்கள்,
விலங்குகள்,
பறவைகள்.




ஊரிலுள்ள
முக்கியமான
இடங்கள்

எனது ஊரிலுள்ள
வசதிகள்

சாலை,
குடிநீர்,
மின்சாரம்,
ஏரி, சந்தை,
வாகனம்

ஊரில் உள்ள
தொழில்கள்,

விவசாயி, கூலித் தொழிலாளி,
தச்சர், மருத்துவர், அலுவலர்.

உரையாடல்

| Day 1 | Day 2 | Day 3 | Day 4 | Day 5 | Day 6 |
|---|---|---|---|---|---|
| வீடுகளின் வகைகள் | ஊரில் வசிப்பவர்கள் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் | இயற்கை நடைப் பயணம் | ஊரிலுள்ள முக்கியமான இடங்கள் | எனது ஊரிலுள்ள வசதிகள் | ஊரில் உள்ள தொழில்கள் |

## உரையாடல்: ஊரில் உள்ள தொழில்கள்:



பானை செய்பவர்கள்



விவசாயி



மருத்துவர்



தச்சர்

## உரையாடல்

**ஊரிலுள்ள முக்கியமான இடங்கள் : (குழந்தைகள் பயன்படுத்தும் )**

**ஊரிலுள்ள முக்கியமான இடங்கள் பற்றி கலந்துரையாடுதல்.**








## வீடுகளின் வகைகள் ;

தங்கள் கிராமத்தில் இருக்கும் வீடுகளின் வகைகள் மற்றும் வீட்டில் காணப்படும் பொருட்கள் பற்றியும் கலந்துரையாடுதல்.









## பாடல்கள்:

| Day 1 | Day 2, 4 | Day 3 | Day 4 | Day 5 | Day-6 |
|---|---|---|---|---|---|
| சிக்கு புக்கு ரயிலு,<br>குச்சு குச்சு ரயிலு, | | | டோரா டோரா டோரா<br>ஊரு பக்கம் போறா | | |

# எனது ஊர், பாடல் - 1

சிக்கு புக்கு ரயிலு,
குச்சு குச்சு ரயிலு,
எங்கூட வருது,
என் ஊரு வருது ..
பாருங்க, என் ஊர பாருங்க.

என்னோட வீடு, (சிக்கு புக்கு - 2)
வீட்டச் சுத்தி ரோடு,
ரோட்டோரம் ஒடு,
கோயில் குளம் பாரு,
பாருங்க, என் ஊர பாருங்க..

தெருவோரம் ஸ்கூலு, (சிக்கு புக்கு - 2)
தினம் வருவேன் பாரு,
மிட்டாய் வங்கும் ஸ்டோரு,
பஸ் ஸ்டாண்டோரம் பாரு
பாருங்க, என் ஊர பாருங்க..

# எனது ஊர், பாடல் - 2

டோரா டோரா டோரா
ஊரு பக்கம் போறா
டோரா டோரா டோரா
ஊர பார்க்கப் போறா

வயலு பக்கம் போறா
நெல்லைப் பார்க்க போறா.
ஏரி பக்கம் போறா
தண்ணீ பார்க்கப் போறா.

வீதி பக்கம் போறா
வீட்டைப் பார்கக போறா.
கடைவீதி பக்கம் போறா
கடையைப் பார்க்கப் போறா.

கோவில் பக்கம் போறா
திருவிழா பார்க்க போறா.
பள்ளி பக்கம் போறா
பாடம் படிக்கப் போறா.

| Day 1 | Day 2 | Day 3 | Day 4, 7 | Day 5, 6 | Day-6 |
|---|---|---|---|---|---|
| நிலாவின் பயணம் | | | நீரைச் சேமிப்போம் | | |

நீரை சேமிப்போம்




அகில் பல் தேய்க்கச் சென்றான்



குழாயில் தண்ணீர் ஓடியதால் குளத்தில் நீர் குறைய தொடங்கியது



மிகவும் வருத்தப்பட்ட மீன் அகிலுக்கு போன் செய்தது



தன் தவறை உணர்ந்த அகில் குழாயை மூடினான்.



நீரை வீணாக்காதீர். நீரை சேமிப்போம்



# நிலாவின் பயணம் - கதை




நிலாவின் பயணம்



பாபுவும் நிலாவும் நண்பர்கள்



ஒரு நாள், நிலா பாபு வீட்டிற்குச் சென்றுவர நினைத்தது.





காந்தி சிலையிடம் பாபுவின் வீடு எங்கே என்று கேட்டது?


காந்தி சிலை, "எனக்குத் தெரியாது அந்தக் கடையில் போய் கேள்" என்றது.









கடை, "எனக்குத் தெரியாது அந்தப் பள்ளியில் போய் கேள்" என்றது.





பள்ளியில் இருந்த பாபு, நிலாவைப் பார்த்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.



கோவில், கடை, குளம், பூங்கா என்று எல்லா இடங்களுக்கும் நிலாவை அழைத்துச் சென்றான். இருவரும் மகிழ்ச்சியோடு விளையாடினர்.






இரவு வந்தது. பாபு தூங்கினான்.
நிலா திரும்பவும் வானத்திற்கே சென்றுவிட்டது.

# விளையாட்டு

| Day 1 | Day 2, 4 | Day 3 | Day 5 | Day 6 |
|---|---|---|---|---|
| கயிற்றுக்கு கீழே தவழ்தல், | நேரான கோட்டில் முன்னும் பின்னும் நடத்தல் . | விரும்பும் விளையாட்டுகள் | கூடையிலிருந்து கலர் மணிகளை எடுக்க செய்தல். | 1. கயிற்றுக்கு கீழே தவழ்தல், 2. நேரான கோட்டில் முன்னும் பின்னும் நடத்தல் |

**நேரான கோட்டில் முன்னும் பின்னும் நடத்தல்:**

- ஆசிரியர், சாக்பீஸால் தரையில் நேர்கோடு வரைய வேண்டும்.
- கோடு முடியும் இடத்தில் ஏதேனும் ஒரு சில பொருட்களை வைக்க வேண்டும்.
- குழந்தைகளிடம் கோட்டின் மீது நடந்து சென்று அங்கிருக்கும் பொருளை எடுத்துக் கொண்டு பின்னோக்கி நடந்து வருமாறு கூற வேண்டும்.
- 3 வயது குழந்தைகளை நேராக நடக்க வைக்கலாம்.
- 4 வயது குழந்தைகளை நேராகவும், பின்னோக்கியும் நடந்து சென்று பொருட்களை எடுத்து வர செய்யலாம்.







## டப்பாவிலிருந்து கலர் மணிகளை எடுக்க செய்தல்.

- 2 டப்பாவில் வெவ்வேறு கலர் மணிகளை எடுத்துக் கொண்டு குழந்தைகளை இரு குழுவாகப் பிரித்து 2 வரிசையில் நிற்க வைக்க வேண்டும்.
- 2 வரிசைக்கும் முன்பு 2 டப்பாக்களையும் வைக்கவேண்டும்.
- ஆசிரியர் ஏதாவது ஓர் கலரின் பெயரைச் சொன்னதும் முன்னால் நிற்கும் மாணவர்கள் இருவரும் தங்களுக்கு நேராக இருக்கும் டப்பாவிலிருந்து அந்த கலர் மணி ஒன்றை எடுத்து வரவேண்டும்





## கயிற்றுக்கு கீழே தவழ்தல்:

- குழந்தைகளை வரிசையில் நிற்க வைக்க வேண்டும்.
- ஆசிரியர் மற்றும் உதவியாளர் இருவரும் நீண்ட கயிற்றைப் பிடித்து நிற்க வேண்டும்.
- குழந்தைகளை கயிற்றுக்கு கீழே தவழ்ந்து வரச் செய்ய வேண்டும். பின் படிப்படியாக உயரத்தைக் குறைக்கலாம்.





# படைப்பாற்றல்

| Day 1, 5 | Day 2, 6 | Day 3 | Day 4 |
|---|---|---|---|
| களிமண் உருவங்கள் செய்தல் | கலர் அடித்தல். | ஊரின் வரைபடம் தயார் செய்தல் | பேப்பர்களைச் சிறிது சிறிதாக கிழித்தல் |

## கலர் அடித்தல்:

- மாணவர்களுக்கு வெவ்வேறு வடிவ படங்களைக் கொடுத்து அவர்கள் விரும்பும் கலரை அடிக்கச் செய்தல்.



## ஊரின் வரைபடம் தயார் செய்தல்:

- ஆசிரியர் பழைய புத்தகங்கள் அல்லது செய்தித்தாளிலிருந்து வீடு, பூங்கா, பள்ளி, கோவில் போன்ற படங்களை வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

- வரைபடத்தாள் மற்றும் படங்களைக் மாணவர்களிடம் கொடுத்து கலந்துரையாடி தங்கள் ஊரில் காணப்படும் இடங்களை சரியான இடத்தில் ஒட்டச் செய்தல்.




# பள்ளி கல்விக்குத் தயார்படுத்துதல்

| Day 1 | Day 2 | Day 3 | Day 4 | Day 5 | Day 6 |
|---|---|---|---|---|---|
| மேலே – கீழே | வரிசைப் படுத்துதல் | வடிவங்கள் அறிமுகம். முக்கோணம் | பல்வேறு பொருட்களின் அளவுகளைக் கொண்டு வரிசைப்படுத்துதல் (பெரியது- சிறியது) | முன்னாடி - பின்னாடி | மேல் - கீழ் வடிவங்கள் வரிசைப் படுத்துதல் |

## மேலே – கீழே :

வகுப்பறையில் இருக்கும் பொருட்களைக் கொண்டு குழந்தைகளிடம் மேலே – கீழே கருத்தைப் பற்றி கலந்துரையாடுதல்.




நாற்காலிக்கு மேலே




மேசைக்கு கீழே

**பொருட்களின் அளவுகளைக் கொண்டு வரிசைப்படுத்துதல் :**

படத்தில் உள்ளது போன்று பெரியதிலிருந்து – சிறியது என வகுப்பறையில் இருக்கும் பொருட்களை பெரியதிலிருந்து சிறியதாக வரிசைப்படுத்தும் நிறைய வாய்ப்புக்களை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்குதல்..






பெரியதிலிருந்து – சிறியது

## வடிவங்கள் அறிமுகம் - முக்கோணம்:

முக்கோண வடிவமுடைய பொருட்கள் அல்லது வரைபடத்தின் உதவியால் குழந்தைகளுக்கு முக்கோண வடிவத்தை அறிமுகம் செய்யலாம்.







சமோசா ஐஸ் கிரீம் முக்**கோணம்**

## வரிசைப்படுத்துதல்- தினசரி நிகழ்வுகள்:

- தினசரி நிகழ்வுகளின் படங்களைக் காண்பித்து குழந்தைகளோடு கலந்துரையாடலாம்.
- முதலில் படங்களை காண்பித்து வரிசைப்படுத்திச் சொல்லும் வாய்ப்பை வழங்கலாம்.
- பின்பு படங்களைக் கொடுத்து தினசரி நிகழ்வுகளின் படி வரிசைப்படுத்தும் வாய்ப்பை வழங்கலாம்.







